18th July 1964]

விட்டது, சேசிஸ் விலை உயர்ந்து விட்டது. கூலி, சம்பளம் உயர்ந்து விட்டது. அதனால் கட்டணத்தை உயர்த்தவேண்டிய நிலை ஏற்பட்டது. ரத்து செய்ய உத்தேசம் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கட்டணச் சலுகை பள்ளிக்குச் செல்லும்போது மட்டும் மாணவர்களுக்குக் கொடுக்க உத்தேசமா? அல்லது 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர் சிறுமிகளுக்கு அரைக் கட்டணச் சலுகை கொடுக்க உத்தேசமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இவைதான் பரிசீலனையில் இருக்கின்றன.

* 526 கேள்வி.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையிலிருந்து சிதம்பரம் வழியாகப் போகும் ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் (State Transport Bus) பஸ்ஸை மேலும் இரண்டாக அதிகரிக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

உளவு நாய்கள்

* 527 கேள்வி.—திரு. எம். கரிவேங்கடம் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நமது போலீசார் வசம் உள்ள போலீஸ் நாய்கள் எத்தனை ?

(இ) 1962-63-ல் அவற்றைப் பராமரிக்க ஆன செலவு எவ்வளவு?

(உ) அண்டை ராஜ்யங்களுக்கு போலீஸ் நாய்கள் அனுப்பப் படுவது உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 9 நாய்கள்.

(இ) ரூ. 11,973-16 ந.பை.

(உ) ஆம்.

* 528 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether it is a fact that the Government have dorpped the proposal of stationing the detective dog squads in each district headquarters?

The Hon. Sri P. KAKKAN : The Government have not considered and dropped any proposal of stationing detective dog squads in each district headquarters.

* மாவட்ட தலைமையிடங்கள் ஒவ்வொன்றிலும் போலீஸ் நாய்களை வைத்து வரும் திட்டத்தை அரசாங்கம் யோசிக்கவும் இல்லை ; இத்திட்டத்தைக் கைவிடவும் இல்லை.